ந.க. எண். 57151 / அந2 / 2016
நாள் : 24 .11. 2016

முதன்மைச்செயலர் /
கருவூலக் கணக்கு ஆணையரகம்,
சென்னை – 600 015.

<u>சுற்றறிக்கை</u>

பொருள்: பணி மாறுதல் – விருப்ப பணி மாறுதல் விண்ணப்பங்கள் – சில அறிவுரைகள் வழங்குதல் தொடர்பாக.

******

கருவூலக் கணக்குத் துறையின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் தங்கள் விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் நேரடியாக ஆணையரகத்திற்கு வந்து முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களிடம் வழங்கப்படுகிறது. அப்படி வரும் நேர்வுகளில் குறைந்தபட்சம் ஒரு வருடம் கூட ஒரு அலுவலகத்தில் பணியாற்றாமல் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. மேலும், முதுநிலைப்படி விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு பதவி வாரியாக இடமாறுதல் கேட்கப்பட்ட இடத்தில் பதவி காலியாக இருக்கும் பட்சத்தில் உடனுக்குடன் பரிசீலனை செய்து பணி மாறுதல் வழங்கவும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, பணியாளர்களின் நலன் கருதியும், பல மாவட்டங்களிலிருந்தும் சிரமப்பட்டு வருவதை தவிர்க்கவும், இனி அனைத்து அலுவலக உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், கணக்கர்கள், கண்காணிப்பாளர்கள் / சார்நிலைக் கருவூல அலுவலர்கள் / கூடுதல் சார்நிலைக் கருவூல அலுவலர்கள், முதுநிலைக் கண்காணிப்பாளர்கள் / உதவி கருவூல அலுவலர்கள் , கூடுதல் கருவூல அலுவலர்கள் **பணிமாறுதல் கேட்கும் விண்ணப்பங்கள், அட்டவணையில் உள்ள காலங்கள் அனைத்தும் பூர்த்தி செய்து தாங்கள் பணிபுரியும் அலுவலகத்திலிருந்து, அலுவலக தலைவர் உரிய வழியாக மண்டல இணை இயக்குநரின் பரிந்துரையுடன் முதன்மைச் செயலர் / கருவூலக் கணக்கு ஆணையருக்கு அனுப்ப வேண்டும் என ஆணையிடப்படுகிறது.**

முதன்மைச் செயலர் /
கருவூலக் கணக்கு ஆணையர்

**இணைப்பு:** பரிந்துரை படிவம்

24/11/16

<u>பரிந்துரை படிவம்</u>

| வ. எண். | | |
|---|---|---|
| 1. | பெயர் | |
| 2. | பதவி | |
| 3. | அலுவலகம் | |
| 4. | தெரிவுப் பட்டியல் வருடம் | |
| 5. | வரிசை எண் | |
| 6. | தற்போது உள்ள பதவியில் எந்த தேதி முதல் பணியாற்றி வருகிறார் | |
| 7. | ஓய்வு பெறும் நாள் | |
| 8. | விருப்ப மாறுதல் காரணம் | |
| 9. | சொந்த மாவட்டம் | |
| 10. | விருப்ப மாறுதல் கோரும் இடம் விரிவாக | |
| 11. | இறுதியாக 5 ஆண்டுகள் பணிபுரிந்த விவரம் | |

| | வ. எண். | பதவி | முதல் | முடிய | அலுவலகம் | மாவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

| | | |
|---|---|---|
| 12. | தனியர் மீது ஏதும் ஒழுங்கு நடவடிக்கை அல்லது ஏனைய நடவடிக்கை நிலுவையில் உள்ளதா? | |
| 13. | மண்டல இணை இயக்குநரின் பரிந்துரை | |
| 14 | சம்பளக் கணக்கு அலுவலரின் பரிந்துரை | |

தனியரின் ஒப்பம்

அலுவலக தலைவரின் ஒப்பம்

சம்பளக் கணக்கு அலுவலர் / மண்டல இணை இயக்குநரின் ஒப்பம்

பெறுநர்:

1. அனைத்து அலுவலகங்கள், கருவூலக் கணக்குத் துறை.
2. அனைத்து அலுவலர்கள் / அனைத்து பிரிவுகள்,
   முதன்மைச் செயலர் / கருவூலக் கணக்கு ஆணையரகம்,
   சென்னை – 600 015.
3. இருப்புக் கோப்பு